# சுற்றாடல் ரீதியாக சிநேகபூர்வமான தீர்வுகள் நிதியம் செயற்திட்டம் II (ஈ-பிரண்ட்ஸ் II)2010

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் செம்மையாக்கல்களின் தாக்கத்தைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட யென் கணக்கிலிருந்து பற்றுதல்களும் அக்கணக்கிற்கான மீள்நிரப்பல்களும் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வேண்டுதல்களுக்கு இணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட செலவுக் கூற்றுக்களின் (எஸ்ஓஈ) மீது நியாயமாக நம்பிக்கை கொள்ள முடியும் என்றும்

(ஈ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகள் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மொத்த பண அளிப்புக்கள் ரூபா 804,191,323 ஆக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலைமை ரூபா 5,591,133,693 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் செயற்திட்டத்தின் பண அளிப்புக்கள் மற்றும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலைமை என்பன கீழே பொழிப்பாக்கி தரப்படுகின்றன.

| பங்குபற்றும் கடன் நிறுவனம் (பீசீஐ) | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பண அளிப்புச் செய்யப்பட்ட தொகை | | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பண அளிப்புக்கள் |
|---|---|---|---|
| | 2010 | 2009 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| வர்த்தக வங்கி | 226,434,939 | 399,144,726 | 1,604,063,790 |
| இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 284,317,156 | 301,366,249 | 1,379,484,950 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 12,399,999 | 148,318,663 | 711,236,508 |
| சம்பத் வங்கி | 30,349,996 | 142,730,415 | 507,482,140 |
| இலங்கை வங்கி | 22,465,797 | 274,740,509 | 484,900,718 |
| ஹற்றன் நஷனல் வங்கி | 91,939,893 | 107,043,414 | 391,201,770 |
| லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி பீஎல்சீ | 69,126,652 | 153,430,121 | 286,988,108 |
| பீபிள்ஸ் லீசிங் கம்பனி பீஎல்சீ | 67,156,891 | 144,297,307 | 225,775,709 |
| மொத்தம் | 804,191,323 | 1,671,071,404 | 5,591,133,693 |

### 2.2 விசேட (யென்) கணக்கு

(அ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது விசேட (யென்) கணக்கின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கானவற்றுடன் ஒப்பிட்டு கீழே தரப்படுகின்றது.

| | 2010 | | 2009 | |
|---|---|---|---|---|
| | ஜப்பான் யென் | இலங்கை ரூபா | ஜப்பான் யென் | இலங்கை ரூபா |
| சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 235,445,459 | 292,258,448 | 636,699,888 | 797,402,940 |
| <u>கூட்டு</u> | | | | |
| ஆண்டின் போது மீள் நிரப்பல்கள் | 424,770,329 | 534,477,378 | 940,184,955 | 1,163,494,064 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 8,842,814 | - | 2,432,848 |
| | 660,215,788 | 835,578,640 | 1,576,884,843 | 1,963,329,852 |
| <u>கழி</u> | | | | |
| பற்றுதல்கள் | 637,155,530 | 804,191,323 | 1,341,439,384 | 1,671,071,404 |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 23,060,258 | 31,387,317 | 235,445,459 | 292,258,448 |

(ஆ) இலங்கை மத்திய வங்கியினால் பேணப்பட்ட விசேட (யென்) கணக்கிலுள்ள 2011 திசெம்பர் 08 இல் உள்ளவாறான ரூபா 31.4 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 23 மில்லியன் தொகையான மீதி குறித்த எந்த நோக்கங்களும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. எனினும் இது இலங்கை அரசாங்கத்தினால் அதே திகதியில் திறைசேரிக்கு மாற்றப்பட்டது.

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப உதவிக் கடன் மற்றும் பொதுக் கடனின் ஒவ்வொரு கூறுக்குமான உப கடன்களின் செயல்முன்னேற்றமானது நிதிக்கூற்றுக்களில் தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட ரீதியாகவும் துறைரீதியாகவும் கடன்களின் திரண்ட பண அளிப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 128,824,283 தொகையான 12 உப கடன்கள் சம்பந்தமாக பங்குபற்றும் கடன் நிறுவனங்களினால் (உரிய வங்கிகள்) நடாத்தப்பட வேண்டிய பரிசோதனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.


### கடன் நிர்வாகம்

### (அ) அங்கீகரித்தல் நடைமுறை

செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஜப்பான் யென்கள் 5,236 மில்லியன்களாக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 வரையான பண அளிப்புக்கள் ஜப்பான் யென் 5,166.82 மில்லியன்களாக இருந்தது. இதற்கிணங்க பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த மீதி ஜப்பான் யென் 69.18 மில்லியன்களாகும் (ரூபா 92.95 மில்லியன்)

(i) தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துரைகளின் பிரகாரம் வெற்றிடமாகவுள்ள செயற்திட்ட பணிப்பாளர் பதவிக்கான அனைத்து செயற்பாடுகளும் அவராலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கிணங்க கடன் அங்கீகாரம் நடைமுறையினை இலகுபடுத்தும் வகையில் பொருத்தமான ஆவணங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் செயலாளரினால் சில பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. எனினும் அவ்வாறான நடைமுறை முறையாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றன.

* இக்கடன் திட்டத்தின் கீழ் 76 உப செயற்திட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது பங்குபற்றும் கடன் நிறுவனங்களுக்கு (பீசீஜ) ரூபா 804.19 மில்லியன் (ஜப்பான் யென் 637.16 மில்லியன்) வழங்கப்பட்டிருந்தது. எனினும் 76 உபகடன் கோவைகளில் ரூபா 235,093,714 தொகையான 34 உறுப்பினர் கடன் கோவைகளை கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கடன் கோவைகளின் பிரகாரம் அவ்வாறான கடன்களுக்காகா முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.
* 76 உப செயற்திட்டத்தின் கீழ் ரூபா 804.19 மில்லியன் சம்பந்தமாக அப்போதைய தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு செயலாளரினால் கடன்களை அங்கீகரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கடன் அங்கீகரித்தல் படிவங்களை கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.




இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 சனவரி 01 இலிருந்து 2010 மே 01 வரையான காலத்தின் போது 76 உப செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மொத்த பண அளிப்புக்கள் ரூபா 804,19 மில்லியனாக இருந்தது. அதன் பின்னர் மீளாய்வாண்டின் போது பண அளிப்புக்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) கடன் உடன்படிக்கையின் பட்டோலை I இன் பிரிவு I இன் பிரகாரம் இலங்கை முழுவதிலுமுள்ள உப செயற்திட்டங்களுக்கு கடன்கள் ஊடாக மூலதனத்தினை வழங்குவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். சில மாவட்டங்களில் மாத்திரம் கடன்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பண அளிப்புச் செய்யப்பட்ட கடன்களின் 42.14 சதவதீம் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் அமுல்படுத்தப்பட்ட 43 உப செயற்திட்டங்களுக்காக பண அளிப்புச் செய்யப்பட்டிருந்தன என்று அவதானிக்கப்பட்டது.

(iii) நிறைவேற்று முகவரால் தயாரிக்கப்பட்ட பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் தகைமையின் காலரீதியான மீளாய்வு தொடர்பான அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 3(7) ஆம் பிரிவின் படி உப கடனின் முதல் மற்றும் வட்டியினை மீளச் செலுத்துவதிலிருந்து தோன்றிய நிதிகளை கடனின் முதலையும் வட்டியையும் மீளச் செலுத்துவதற்கும் ஈ-பிரன்ட்ஸ் சுழற்சி நிதியக் கணக்கு II இன் ஊடாக செயற்திட்டத்தின் அதே குறிக்கோள்கள், நியதிகள் நிபந்தனைகள் என்பவை மீது பங்குபற்றும் கடன் நிறுவனங்களுக்கு கடனாக வழங்குவதற்கும் அரசாங்கம் நிதிகளைப் பயன்படுத்துதல் வேண்டும். எனினும், சுழற்சி நிதியக் கணக்கில்

(ii) 2009 ஆம் ஆண்டின் முன்னைய மூன்று காலாண்டுகளுடன் ஒப்பிடும் பொழுது கடைசிக் காலாண்டில் செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் கடன் அங்கீகாரங்களில் வழமைக்கு மாறான அதிகரிப்புக் காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,671.1 மில்லியன் தொகையான மொத்த பண அளிப்புக்களில் ரூபா 779.7 மில்லியன் அல்லது 47 சதவீதம் 2009 ஆம் ஆண்டின் கடைசிக் காலாண்டிற்குள் பண அளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(iii) உப செயற்திட்டங்களை அங்கீகரிக்கும் திகதியிலிருந்து கடன்களின் பண அளிப்புக்கான காலம் நியாயமான அளவாக இருக்கவேண்டிய போதிலும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் மற்றும் ஒரு மாதத்திற்கு குறைந்த காலம் போன்றவாறான பண அளிப்புக்களுக்கான யதார்த்தமற்ற காலம் எடுத்திருந்தமை பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டது. உதாரணமாக 2009 ஆம் ஆண்டின் கடைசிக் காலாண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட 24 உப செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 541.8 மில்லியன் தொகையான கடன்களில் ரூபா 466.2 மில்லியன் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கடனின் 86 சதவீதமானது அவ்வாறான உப செயற்திட்டங்களின் அங்கீகரித்தல் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் பண அளிப்புச் செய்யப்பட்டிருந்தன.

(ஈ) மரத்துாள்கள், மரத்துண்டுகள், மரச்சீவல்கள் என்பவற்றினைப் பயன்படுத்தி ஒட்டுப்பலகைகளைத் தயாரிப்பதற்காக ஒட்டுப்பலகை தயாரிக்கும் இயந்திரத்தினைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தினால் ரூபா 50 மில்லியன் பண அளிப்புச் செய்யப்பட்ட உப செயற்திட்டம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் இந்த உப செயற்திட்டத்திற்காக 2007 ஜனவரி 18 ஆந் திகதி தகைமை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இது ஈ-பிரண்ட் II செயற்திட்டத்தின் நோக்கெல்லைக்குள் காணப்படாததினாலும் பின்வரும் காரணங்களினாலும் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் ஆலோசகர் தனது 2008 பெப்ரவரி 21 ஆந் திகதியிடப்பட்ட அறிக்கையின் மூலம் ஈ-பிரண்ட் II கடன் திட்டத்தின் கீழ் மீள் நிதியளிப்பதற்கு இதனைச் சிபார்சு செய்திருக்கவில்லை.

- x அக்கடனில் ஒட்டுப்பலகை தயாரிக்கும் இயந்திரத்தின் கொள்வனவு உள்ளடக்கப்படவில்லை.
- x மேற்குறித்த இயந்திரம் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டு 2005 இல் வேலைத்தளத்தில் பொருத்தப்பட்டிருக்கவில்லை. ஆனால் இது தொடக்கத்தில் மற்றுமொரு கம்பனியால் 1990 களில் இறக்குமதி

(v) சுற்றாடலை மேம்படுத்துவதும் சுற்றாடல் பாதுகாப்பு நியமங்களை அடைந்துகொள்வதும், மேற்குறித்த உப செயற்திட்டம் மீதான சுற்றாடல் தாக்க ஆய்வு அல்லது சாத்திய வள ஆய்வு என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாக இருந்த போதிலும் இது செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் மேறகொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) இலங்கை வங்கியின் மொறட்டுவை கிளை முகாமையாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களும் வெளிப்படுத்தப்பட்டன.

- x வங்கிக்கான தற்போதைய கடனின் வட்டியும் தவணைப் பணமுமாகச் செலுத்தவேண்டிய தொகையினை கம்பனி தீர்த்துவைத்திருக்கவில்லை.
- x ஈ-பிரணட்ஸ் II கடனிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் வங்கிக்கான கடனுக்கு எதிராக அடமானம் வைக்கப்பட்ட இயந்திரங்களில் ஒரு இயந்திரம் வங்கியின் அங்கீகாரமில்லாது கம்பனியினால் விற்றுத்தீர்க்கப்பட்டிருந்தது.

(vii) செயற்திட்டத்தின் சுற்றாடல் உத்தியோகத்தரின் அறிக்கையின் அடிப்படையில் 2009 செப்தெம்பர் 24 ஆந் திகதி கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பயணத்தில் அவ்வியந்திரங்கள் சில ஆண்டுகளுக்கு முன்னர் பொருந்தப்பட்டிருந்தமையும் சில உற்பத்திப் பொருட்கள் பரீட்சிக்கப்பட்டமையும் வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் அவ்வியந்திரங்கள் நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(viii) இதற்கிணங்க அந்த உப செயற்திட்டத்திற்கு பண அளிப்புச் செய்யும் போது சுற்றாடல் பாதுகாபபு நியமங்களை நிறைவேற்றுவதற்காக அந்த உப செயற்திட்டத்தின் சுற்றாடல் மேம்பாடும் இயலுமையும் செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) காசு முகாமைத்துவம்
(ஆ) மனித வள முகாமைத்துவம்
(இ) உப செயற்திட்டங்களின் கண்காணிப்பும் மதிப்பீடும்